**8001**

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ]                                    [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகள் வீதம் விடை எழுதுக :                                    4 × 2 = 8

1. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்களைக் கூறுக.

2. நற்றாய், காக்கைக்கு எவ்வாறு பலிக்கடன் கொடுப்பதாகக் கூறினாள் ?

3. மறவற்க எனவும், துறவற்க எனவும் திருவள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார் ?

4. பாவேந்தரின் நூல்களுள் நான்கின் பெயர்களை எழுதுக.

5. வீரமாமுனிவரின் இலக்கியப் பங்களிப்பு எத்தகையது ?

6. சுந்தரகாண்டம் எனப் பெயர் வரக் காரணம் யாது ?

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக : 3 × 4 = 12

7. தலைவன் வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியதை விளக்குக.

8. அறிவின் இலக்கணத்தைத் திருவள்ளுவர் வழி நின்று விளக்குக.

9. கோவலனைக் கண்டபொழுது நிகழ்ந்த அற்புதம் யாது ?

10. தாவீதன் கோலியாத்துக்கு உரைத்த மறுமொழி யாது ?

11. பேழையை மீட்டுத் தருமாறு அன்னம் வேலனை எவ்வாறு வேண்டிக் கொண்டாள் ?

III. பின்வரும் வினாக்களுக்குள் எவையேனும் ***மூன்றனுக்கு*** ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக: 3 × 4 = 12

12. பெருமாள் உறை திருவேங்கடபதி குறித்துப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை ?

13. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்களாகப் பாரதிதாசன் குறிப்பிடுவன யாவை ?

14. சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை ?

15. சிலுவையிற் பரித்தியாகம் செய்த பெருமானைக் கிருஷ்ணப்பிள்ளை எவ்வாறு அஞ்சலி செய்கிறார் ?

16. தலைவி மேகத்திடம் மொழிந்த தூதுமொழிகளாகக் குமரகுருபர் கூறுவன யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது வரிகளில் விடை எழுதுக. 1 × 8 = 8

17. 'வினைத்திட்பம்' என்னும் தலைப்பில் திருவள்ளுவர் கூறியுள்ளன யாவை ?

18. சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகளை எழுதுக.

19. மனிதநேயம் பற்றிக் கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

V. பின்வரும் செய்யுளின் கீழ், கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. $4 \times 1 = 4$

20. ''வண்டுறை ஒதியும் வலியள், மற்றிவன்

கண்டதும் உண்டு; அவள் கற்பும் நன்று''

அ) 'வண்டுறை ஒதியும் வலியள்' யார் ?

ஆ) 'மற்றிவன்' யாரைக் குறிப்பிடுகிறது ?

இ) இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது ?

ஈ) இது யார்ருடைய கூற்று ?

அல்லது

21. ''வெறுங்கை என்பது மூடத்தனம்

விரல்கள் பத்தும் மூலதனம்''

அ) இவ்வரிகளைப் பாடிய கவிஞர் யார் ?

ஆ) எது மூடத்தனம் ?

இ) எவை மூலதனம் ?

ஈ) இவ்வரிகள் உணர்த்தும் கருத்து யாது ?

VI. 22. ''வெல்லை வேல்'' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதன் பாவகையையும் எழுதுக. $4 + 2 = 6$

23. ''அஞ்சுவ'' எனத் தொடங்கும் குறட்பாவையும், ''வரைத்து'' என முடியும் குறட்பாவையும் அடிபிறழாமல் எழுதுக. $2 + 2 = 4$

VII. 24. எவையேனும் ***இரண்டு*** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. $2 \times 2 = 4$

அ) கேட்டாள் ஆ) புக்கேன் இ) காண்பது

ஈ) செய்க உ) வந்தனன் ஊ) வாழ்த்துவம்.

25. கீழ்க் கோடிட்ட தொடர்களுள் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. **3 × 2 = 6**

அ) வைத்த <u>மாமணி</u>

ஆ) <u>தாவும்</u> கண்

இ) <u>கருமுகில்</u>

ஈ) நரைமுதிர் <u>திரைகவுள்</u>

உ) <u>ஒரீஇ</u>

ஊ) <u>விக்கி விக்கி</u>.

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. **2 × 2 = 4**

அ) நானென்று ஆ) கடுந்திறல் இ) மாசற்றார்

ஈ) ஆருயிர் உ) பெருந்தெய்வம் ஊ) செழும்பொன்.

27. கீழ்வருவனவற்றிற்கு சான்று தந்து விளக்குக. **1 × 4 = 4**

வரைவு கடாதல் துறை *அல்லது* பாலைத் திணை.

28. ''உதவி வரைத்தன்று உதவி உதவி

செயப்பட்டார் சால்பின் வரைத்து''

- இச்செய்யுளில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

அல்லது

எடுத்துக்காட்டு உவமையணி அல்லது தற்குறிப்பேற்ற அணியை விளக்கி, எடுத்துக்காட்டும் தருக **1 × 4 = 4**

VIII. பொருத்துக. **4 × 1 = 4**

| திணை | | பாடியோர் |
|---|---|---|
| 29. குறிஞ்சி | — | ஓரம் போகியார் |
| 30. முல்லை | — | அம் மூவனார் |
| 31. மருதம் | — | ஓதலாந்தையார் |
| 32. நெய்தல் | — | கபிலர் |
| | — | பேயனார். |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. $16 \times 1 = 16$

33. அகநானூறு மணிமிடைப் பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ) 100

ஆ) 120

இ) 180.

34. கபிலரை ‘வாய்மொழிக் கபிலர்’ என்று போற்றியவர்

அ) நக்கீரர்

ஆ) பெருங்குன்றூர்க் கிழார்

இ) மாறோக்கத்து நப்பசலையார்.

35. திருக்குறளில் அமைந்துள்ள இயல்களின் எண்ணிக்கை

அ) மூன்று

ஆ) ஒன்பது

இ) நான்கு.

36. சிலப்பதிகார உரையாசிரியருள் ஒருவர்

அ) இளம்பூரணர்

ஆ) அரும்பதவுரைக்காரர்

இ) நச்சினார்க்கினியர்.

37. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது

அ) பழமொழி

ஆ) திருவள்ளுவமாலை

இ) நாலடியார்.

38. இராமன் கொடுத்ததாகச் சீதையிடம் அனுமன் காட்டியது

அ) கணையாழி

ஆ) அணிமணிகள்

இ) கடிதம்.

39. தாம் இயற்றிய இராம காதைக்குக் கம்பர் இட்ட பெயர்

அ) வழிநூல்

ஆ) ஆதிகாவியம்

இ) இராமாவதாரம்.

40. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி

அ) சதுரகராதி

ஆ) பேரகராதி

இ) அரும்பத அகராதி.

41. 'புலன்' என்னும் இலக்கிய வகை

அ) கலம்பகம்

ஆ) பள்ளு

இ) உலா.

42. முக்கூடற் பள்ளுக்குரிய பாவகை

அ) சிந்துப்பா

ஆ) ஆசிரியப்பா

இ) வஞ்சிப்பா.

43. பாரதிதாசனின் இயற்பெயர்

அ) துரைராசு

ஆ) எத்திராசன்

இ) சுப்புரத்தினம்.

44. வடமொழியில் பாரதம் பாடியவர்

அ) வான்மீகி

ஆ) வியாசர்

இ) காளிதாசர்.

45. உவமைக் கவிஞர் எனப் பாராட்டப்பட்டவர்

அ) சுப்பிரமணிய பாரதி

ஆ) சுரதா

இ) கண்ணதாசன்.

46. 'சின்னச் சீறா' என்ற நூலை எழுதியவர்

அ) உமறுப் புலவர்

ஆ) குணங்குடி மஸ்தான்

இ) பனு அகுமது மரைக்காயர்.

[ Turn over

47. சுந்தரர் தேவாரம்

அ) முதலாந் திருமுறை

ஆ) ஏழாந் திருமுறை

இ) பன்னிரண்டாந் திருமுறை.

48. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன்

அ) சிவன்

ஆ) திருமால்

இ) முருகன்.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 + 2 = 4

49. அகழ்வாரைத் தாங்கும் ................ தம்மை

................ பொறுத்தல் தலை.

50. எந்நன்றி ................ உய்வுண்டாம் உய்வில்லை

செய்நன்றி ................ மகற்கு.